Registered as a News Paper in Ceylon
P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵
(1889)
ஆவணி௴ 28௨
ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சூஅ] யாழ்ப்பாணம்:- துன்முகி௵ மார்கழி௴ கச௨ வெள்ளிக்கிழமை (28 DEC. 1956) [இல-நள]

# நாவலரின் சேவை நற்பயன் அளித்தேவருகின்றது

## திருக்கேதீச்சரத் திருப்பணிக்கு அடிகோலிய அறிஞர்

( முற்றொடர் )

**நாவலரும் சமயமும்**

நாவலர் தம் வாள் நாட்களில் கருதிய பல செயல்களைச் செய்து முற்றுவிக்கும் பேராற்றல்படைத்தவர். அவருடைய இறுதிக் காலத்தில் அவருடைய மனதை வாட்டிய தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள் இரண்டு இவ்விலங்கையில்உள்ளன. அவைகளுள் ஒன்ருகிய திருக்கோணமலைக்குச் சம்பந்தமூர்த்தி நாயனுர் செய்த திருப்பதிகம் ஒன்றிருக்கின்றது மற்ருென்ருகிய திருக்கேதீச்சரத்திற்கு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் திருப்பதிகம் ஒன்றும் சுந்தரமூர்த்திநாயனுர் திருப்பதிகம் ஒன்றும் இருக்கின்றன. இத் திருக்கேதீச்சரம் இலங்கையின் வடமாகாணததில் மன்னுருக்குச் சமீபத்தில் இருக்கின்ற "மாதோட்டம்" என்னும் இடத்தில் இருக்கின்றது. "பொன்னிலங்கிய முத்துமாமணிகளும் — பொருந்திய மாதோட்டம்" என திருஞானசம்பந்தர் தேவாரப்பதிகத்திலும்; "......வங்கம் மலிகின்ற கடன் மாதோட்டநன்னகரில் தெங்கம்பொழில் சூழ்ந்த திருக் கேதீச்சரத்தானே" என சுந்தரமூர்த்தி நாயனுர் தேவாரப்பதிகத்திலும் மாதோட்ட நகரின் பெருமையை நன்கு அறியலாகும் இங்கேயுள்ள இத் திருக்கேதீச்சரம் அழிந்து கிடக்கின்றது என்பதனையும் இதனைச் சைவமக்கள் எல்லோரையும் சிந்திக்கும்படியாகவும் எடுத்து நாவலர் சுட்டிக் காட்டியுள்ளார் அதனை மேற்கொள்ளுங்கள். உங்களுக்கு இறைவன் துணை புரிவான் என வேண்டிக்கொண்டார். மேலும் அவர் இடித்துக் கூறியதாவது:—

ஆசிரியர் திரு. சி. சிவரத்தினம்
நாவலர் வித்தியாசாலை

திருக்கோயில் முதலியவை அழிந்தால் அவற்றை முன்போலச் செய்தார் பெறும் பயன் அவற்றை முன்செய்தவர் பெற்ற பயனிலும் ஆயிரம்மடங்கு அதிகமாகும்'

அது வீண் போகவில்லை. அப்பணியில் ஓரளவு முற்றுப்பெற்று நித்திய பூசைகள் முதலியன செவ்வனே நடைபெற்று வரும் பணியில் சைவநன்மக்கள் ஈடுபட்டுழைத்து வருகிறுர்கள். அது போற்றுதற்குரியதாகும். இன்னும் அப்பணிக்கு சைவமக்கள் வேண்டிய உதவிகளைச் செய்யத் தாபாகவே முன்வர வேண்டியது கடமையன்ருே? நாவலர் அவர்களின் அன்றைய பணி அவரில்லாமலும் சிறிதளவு நடைபெற்று வருகின்றது. அவரது தீவிரமான சமயபக்தி சைவமக்கள் மனதைக் கவர்ந்துவிட்டது.

இவ்வாறு நம் புலவர்மணி செய்த சமயத்தொண்டு நல்ல பலனையே அதிகமாக அளித்திருக்கிறது. அவரைக் கடுமையாகத் தாக்கிய பகைவர் கூட அவ்வுண்மையை ஒப்புக்கொள்வர்.

**பிரசாரத்தின் பயன்**

நாவலர் அவர்கள் பிரசாரத்தின் மூலமாகச் சமயத்தை விருத்தியாகக்க எண்ணங்கொண்டார் வண்ணுர்பண்ணையில் பிரசங்கமாரி பொழியத் தொடங்கினுர். இவர் பிரசங்கத்தைக் கூட்டங்கூட்டமாய் மக்கள் வந்து கேட்டனர்; அதனுல் அறியாமையை அகற்றினர்; சைவநெறி அறிந்தனர்; கள், ஊன் முதலியவை உண்பதை நிறுத்திப் பலர் தூய சைவ உணவு உண்டனர்; நாத்திகரும் சிவபக்தி செய்தனர். கந்தபுராணம், பெரிய புராணங்களை ஓதினர். விபூதி உருத்திராக்கம் தரித்தனர்; சிவாலய தரிசனஞ் செய்தனர்; கோயில் சன்னிதியில் மனமடங்கி வணங்கினர்; பதிப் பாடல்களைப் பாடினர்; விரதங் காத்தனர்; பஞ்சாட்சரம் செபித்தனர்; வாய் திறந்து சிவநாமஞ் சொல்லக் கூசியவர்கள் தேவாரத்துடன் சிவகோஷஞ் செய்தனர்; சிவாகமங்களை மூடக் கொள்கைகளென்று ஏசியவர்கள் பெரிய புராணத்தையும், கந்தபுராணத்தையும் படித்தும்—கேட்டும் பரவசமானுர்கள்; இந்துக்களை அஞ்ஞானிகள்என்ற பாதிரிமாருக்குத் தங்கள் மெஞ்ஞானத்தை விளக்கினுர்கள்; ஆங்கில மோகத்தாலும், பரசமய மயக்கததாலும் சைவதூஷணஞ்செய்து ஒழுக்கங்கெட்ட நாத்திகரும் சிவநிந்தையைவிட்டு ஆஸ்திகரானுர்கள்; திரு உருவத் தொழுகையைக் காட்டுமிராண்டி வேலையென்று தூற்றியோர், கோயில் மூர்த்தியை விழுந்து விழுந்து கும்பிட்டனர்; சட்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

அரசியல் அலை

# பொதுவுடைமைத் தலைவரின் புதுக்கோலம்

## அரசாங்கத்துடன் சேர்ந்துவிட ஆவலா?

கொட்டாஞ்சேனை மேற்கிலே திரு. பீட்டர் கெனமனின் வெற்றி வரவேற்புக் கூட்டத்தில் வேடிக்கையான பேச்சுக்கள் நிகழ்த்தப்பெற்றிருக்கின்றன. இவற்றின் எதிரொலி எவ்வாருகுமோ தெரியவில்லை. ஆனுல் ம. ஐ. மு. பொதுவுடைமைக் கட்சியையும் சமசமாசக் கட்சியையும் அறைகூவி அழைக்கின்றதாகவும் அந்த அழைப்பு இன்னும் கூடுதலான சினேகபான்மையில் இருந்தாற் பயன் அளிக்கும் என்றும் பொதுமக்கள் விளங்கக்கூடிய வகையிலே திரு. பீட்டர் கெனமன் பேசியிருக்கிறுர்.

இது ஒரு புதுக் கோலமாகத் தோன்றுகின்றது. பொதுவுடைமைக்கட்சி அரசாங்கத்துட் புகுந்துவிட ஆவல் கொண்டிருக்கின்றதா என்று யாரும் எண்ணினுல அது தவருகாது போலத் தோன்றுகின்றது. ம. ஐ. மு. அரசாங்கத்தை இடதுசாரிகள் வைது நகையாடுவது இடையிடையே யன்றிப் பொதுவாகப் புகழ்மாலை போடுவதே வழக்கமாய்விட்டது. பிரதமர் பண்டாரநாயகவின் வெளிநாட்டுக் கொள்கையை ஆதரித்துப் பேசிய திரு. கெனமன் மனம் மாறுதலடைந்திருப்பதாகக் காணப்படுகின்றது.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# காஷ்மீர்ப் பிணக்கு

## பலர்விளங்காதிருப்பதில் ஆச்சரியம்

அமெரிக்க தலைநகரில் பத்திரிகை நிருபர் மகாநாட்டில் பண்டிதநேரு அவர்கள் பேசும்போது காஷ்மீர் விஷயம் இலகுவாக விளங்கக்கூடியதொன்று. அங்கே பாக்கிஸ்தான் போர் தொடுத்துள்ளது. அப்போர் நிறுத்தப்பட வேண்டும். அதற்கு பாக்கிஸ்தான் தன் படைகளைக் காஷ்மீரிலிருந்து வெளியேற்றவேண்டும். அத்திபாரமாயுள்ள இவ்வுண்மையைப் பலர் விளங்கமாட்டாதிருப்பதைக் கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன்.

அரசியல் முறை சட்டமுறை ஆகியவற்றின் வழியில் காஷ்மீர் மக்களின் விருப்பப்படி காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்துவிட்டதென்பது உண்மையே. தனது தனிப்பட்ட விருப்பத்தின்படி பாக்கிஸ்தான் எதை எப்போது செய்யும் என்று நாங்கள் என்றென்றும் எதிர்பார்த்திருக்க முடியாது. போதியளவுக்கு நாங்கள் பொறுமையாய் எதிர்பார்த்திருந்துவிட்டோம் என்று கூறினுர்.

# நாட்டின் சிறந்த செல்வம்

## எதிர்காலத்தில் உருவாதற்கு வழி

ஒருநாட்டைச் செழிப்படையச் செய்வர்கள் ஞானிகள், பெற்ருேர்கள் ஆசிரியர்கள். ஒருநாடு எவ்வளவு நீர்வளம், நிலவளம் பொருந்தியதாயிருந்த போதிலும் அந்நாட்டின் மக்களிடம் தெய்வ நம்பிக்கை, ஈகை, ஒழுக்கம், பொறுமை, முயற்சி முதலிய சிறந்த பண்பாடு விளங்கா விட்டால் அது உண்மையில் செழித்த நாடென்று கூறுவதற் கிடமில்லை. ஒருநாட்டைப் பல வழிகளிலும் உயர்ந்த பீடத்தை வகுக்கச் செய்வது அந்நாட்டின் தத்துவ ஞானிகள். பரத கண்டம் பண்டும் இன்றும் என்றும் உலகத்திற்கு மலைத் தீபம்போல விளங்குகிறது. பரத கண்டத்தின் உயர்ந்த இலட்சியத்தை முன்மாதிரியாகக் கொண்டே மற்றத் தேசங்களும் முன்னேற வேண்டும். ஒருநாடு பல வழிகளிலும் முன்னேறவேண்டுமானுல் அந்நாட்டிலுள்ள வீடுகள் வித்தியாலயங்கள், திருக்கோயில்கள் ஒத்தியங்கவேண்டும். இந்த மூன்றும் ஒத்தியங்கினுல்தான் கிராமம் முன்னேறும்.

வீட்டிலுள்ள பெற்ருேர்கள் சிறந்த முறையில் வாழ்ந்து காட்டினுல் தான் பிள்ளைகளும் அதனைப் பின்பற்றி வாழப்பழகுவார்கள்.

ஆசிரியர், திரு. செ.
சின்னத்துரை B. A. அவர்கள்

சைவப் பெற்ருர்கள் சைவ ஆகம வேத விதிப்படி ஒழுகி, சைவப் பற்றுடையவர்களாவும், மனம் வாக்குக் காயம் மூன்றும் சுத்தமடையவேண்டுமென்ற அவாவுடையவர்களாகவும் வாழ்ந்தால் கிராமம் முன்னேறும். ஒரு குழந்தை மற்றவர்களைப் பார்த்துத்தான் தானும் பழகுகின்றது. குழந்தையின் வளர்ச்சி வீட்டையும், அதன் சூழலையும் பொறுத்திருக்கின்றது. வீட்டிலும் சூழலிலுமுள்ளவர்கள் பொய் பேசல், வியபிசாரம் முதலிய பஞ்சமா பாதகங்கள் செய்பவர்களாயிருந்தால், அச்சூழலிலுள்ள குழந்தைகளும் அத்தீய பழக்க வழக்கங்களைத் தப்பாமல் பழகுவார்கள். எமது சமுதாயம்முன்னேறவேண்டுமானுல், மக்களின் வாழ்க்கை தூய வாழ்க்கையாக அமைய வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் சைவ மணங்கமழ வேண்டும். பெற்ருேர்கள் பொறுமை, வஞ்சனை, பொய் முதலியவற்றைக் கடிந்தவர்களாகவும், சைவ அனுஷ்டானமுள்ளவர்களாகவும்வாழ வேண்டும்.

தொடர்ச்சி ௫-ம் பக்கம்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

யாழ் துர்முகி௵ மார்கழி௴
௧௨ ௳ வெள்ளிக்கிழமை


## ஐந்துபேர் ஆட்சியாய் கொழும்புமா நகரில்

சனநாயகக் கொள்கையை உலக நாடுகளுக்கு எடுத்து உபதேசஞ் செய்தேன்; அதை அவர்கள் உணர்ச்சியுடன் வரவேற்றனர் என்று தனக்குத் தானே சாற்றுகவி பாடி ஆநந்தங் கொண்டாடும் பிரதமர் பண்டாரநாயக இலங்கையின் கிட்லர் ஆக வீற்றிருக்கின்றார் என்பது தெளிவாகப் புலப்படுகின்றது.

கொழும்பு மாநகரசபையிலே ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பதினெண்மரும் மக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஐவரும் என்ற நிலைமை பிரதமரை வருத்துகின்றதென்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் வாக்காளர்கள் நோக்கம் அப்படியாயிற்று. பொது சனத்தின் தீர்ப்புக்கு உரிய மதிப்பை இகழ்ந்துவிடும் பிரதமர் ஐந்து பேருடன் ஆதிக்கஞ் செலுத்துவதென்று வீரங்கூறுவது விபரீதமாகின்றது. அவ்வாறு தாம் எவ்வாற்றானும் கூறவில்லை என்று திரு. பண்டாரநாயக மறுத்தபொழுதிலும் தோல்வியின் பயனாக எழுந்த துவேஷத்தினாற் பொது சனத்தின் விருப்பத்தை மதிக்க மாட்டேன் என்ற பொருள்படப் பேசினார் என்பதை மக்கள் மறந்துவிடமாட்டார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் போராட்டத்தை நடத்துவதொன்று, மக்கள் தீர்ப்பை மறுப்பது இன்னொன்று. கொழும்பு மாநகரை ஐ. தே. க. ஆண்டாலென்ன ம. ஐ. மு. பரிபாலித்தாலென்ன தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரையில் வித்தியாசம் விளங்கமாட்டாது. செட்டிநாகந் தீண்டினாலென்ன, பறவைநாகந் தாக்கினால் என்ன தீங்கின் பயன் ஒன்றே.

ஐவர் இருபத்தாறுபேரை எதிர்த்து அதிகாரஞ்செலுத்துவார்கள் என்று கூறும் பிரதமர், தமிழ் பேசும் மக்கள பாராளுமன்றத்தில் எண்ணிற் குறைந்திருந்தும் ஏனையோர் தமிழ் மொழிக்கு இழைக்கும் பழிச்செயல்களை எதிர்க்கிறோம் என்று சொல்வதில் என்ன பிழை காண்கின்றார்? தமிழ் பேசும் அங்கத்தவர்கள் கண்டனஞ் செய்து எதிர்ப்போம் என்கிறார்களேயன்றி ஆதிக்கஞ் செலுத்துவோம் என்று ஒவ்வாதவற்றை உரைக்கவில்லையே. விசை வண்டிகளிற் சிங்கள எழுத்தைப் பொறித்திருக்கும் ம. ஐ. மு. அரசாங்கத்தைத் தமிழ்பேசும் மக்கள் ஒரு குரலிற் கண்டனஞ் செய்வதை ஏன் ஏற்றுக்கொள்கின்றார்களில்லை? ஆகவே ஐந்துபேர் ஆதிக்கம் கொழும்பில் நடைபெறுவதென்ற பயமுறுத்துதல் கொடுங்கோலாட்சிக் கொள்கையேயாகும். ஐவருடன் ஆதிக்கஞ் செலுத்த எண்ணும் ம. ஐ. மு. எழுபதின்மருடன் பாராளுமன்றத்திலே என்னதான் செய்யமாட்டாது?

# திருக்கேதீச்சரத் திருப்பணி

## நிறைவேற்றுதல் எங்கள் உய்திக்கு வழி

### சோமவாரத் திருநாட் சொற்பொழிவு

••

திருக்கேதீச்சரச் சிவாலயத்தில் மூன்றாம் சோமவார விழாவில் சைவப்பிரசாரகர் திரு. பொன். அப்புக்குட்டி அவர்கள் "கடவுள் வழிபாடு" என்னும் பொருள்பற்றி ஓர் சிறந்த சைவப்பிரசங்கம்செய்தார். அவர் பேசும்போது கடவுள் விசுவாசம் அபர பக்கச் சந்திரன்போல் நாளுக்குநாள் குன்றி வருகிறது. மக்கள் பிழை வழியில் செல்கின்றனர். சமயப் பண்புகள் பாழாகின்றன. ஒழுக்க வரம்புகள் உடைபடுகின்றன

"ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம்
உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம் தானங்கள்
வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவடக்கம் அறி
வொடர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்களானல்
இரங்குவான் பணியறங்கள்"

என்பது சித்தியார். "செய்வன திருந்தச்செய்' என்றார் ஔவையாரும் அறங்கள் பொதுவாகப் பசித்தவனுக்குப் பசிதீர்க்கும். பின்பு பசிக்கச் செய்வது போல் பயன்கொடுக்கும். பிறவியிற்றள்ளும். இறப்பில் தவமாம் சரியை கிரியை யோகம் ஞானம் இம்மையில் நல்வாழ்வையும் அம்மையில் முத்தியையும் அளிக்கும். இவ்வுடம்பு இறைவனால் சிவதொண்டு செய்து முத்தியடையவே எமக்கு உபகரிக்கப்பெற்றது. இறைவன் சொன்ன விதி அறமாகலின் சிவனை மறந்து செய்யும் அறங்களெல்லாம் வீண் செயல். நேற்றிருந்தான் இன்று வெந்து நீறானன்" என்றார் பட்டினத்தடிகள். இளமையும் யாக்கையும் செல்வமும் நிலையா. நிலையில்லாத உடம்பு உயிர் வாழ்க்கையை கட்டித் தழுவினால் ஏமாந்துபோக நேரும், நள்ளிரவில் நாட்காரியம் செய்ய விரும்பினல் பகலில் கடைகள் திறந்திருக்கும்போது வேண்டிய பொருட்களைச் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். இன்றேல் நாட் காரியம் செய்ய முடியாது. அஃதேபோல உடம்பிருக்கும்போதே தேட வேண்டிய தவத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். சோமவார விரதம் சிறந்த சிவ விரதம். நாங்கள் இன்று இத் திருநாளில் மூர்த்தி தலம் தீர்த்தவிசேடமுடைய சிறந்த உயர்ந்த திவ்விய ஷேத்திரத்தில் கேதீச்சரநாதன் சந்நிதியில் வந்து குழுமிய பாக்கியமே பாக்கியம். புண்ணியமே புண்ணியம்.

"பூவுளானும் பொருகடல்வண்
ணனும்புவியிடந்தெழுந்தோடி
மேவிநாடி நின்னடியினை காண்
கிலா வித்தக மென்னாகும்
மாவும் பூகமும் கதலியு நெருங்கு
மாதோட்ட நன்னகர் மன்னித
தேவிதன்னொடு திருந்துகேதீச்ச
ரத் திருந்த எம்பெருமானே"

என்று கேதீச்சரப் பெருமானைப் புகழ்ந்துபாடினர் திருஞானசம்பந்தர். இத்தகைய திவ்விய ஷேத்திரத் திருப்பணி குறையாய்க் கிடப்பது சைவமக்களுக்கு சமய உணர்ச்சியில்லாத் தவக்குறைவாலேயாம். நன்மையும் தீமையும் பிறர்தர வாரா. உடலுக்கு உணவும் மனத்துக்குக் கல்வியும் ஆன்மாவுக்கு கடவுள் வழிபாடும் இன்றியமையாதவை. அவையின்றி நல்வளர்ச்சியடையா. "தனக்குவமையில்லாதான் றாள் சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றலரிது" என்பது தமிழ்வேதம். "தெண்ணிலா மலர்ந்த வேணியாயுன்றன் றிருநடம் கும்பிடப்பெற்று மண்ணிலே வந்த பிறவியே வாரிதாமின்பம்" என்று குதாகலிக்கிறார் சுந்தரர். அனைத்தும் வேடமாமம்பலக் கூத்தனை—நினைத்தனைப்பொழுது மறந்துய்வேனோ" என்று இரங்குகிறார் அப்பர். எங்களுக்குக் கிடைத்த அருந்தருணத்தை இழந்துவிடாது அரன்பணியாற்ற இன்னே நாம் முயலவேண்டும். சிறந்த புராணபடனங்கள்தானும் இப்போது கைவிடப்பட்டுவிட்டன. அரனிடத்தில் அன்பைப்பெருக்கி ஆருயிரைக் காக்கவேண்டுமென்றால் வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டுமென்றால் நாடெங்கும் புராணபடன முழக்கம் செழிக்கச் செய்ய வேண்டும். இப்பொழுது எமக்கு வாய்த்த தருணத்தைப் பயன்படுத் திருப்பணியை முற்றுவித்த லாகிய சிவதொண்டாற்றி உய்வோமாக.



## விவேகாநந்த வெளியீடுகள்

அழகிய படத்துடன் பொருத்தமான திருக்குறட் பாக்களும், பொது வாழ்க்கையில் வேண்டப்படும் குறிப்புகளுமடங்கியனவாய் யாழ்ப்பாணம் விவேகானந்த அச்சகத்தார் வெளியிட்ட தகதி வெளியீடும் குறிப்புக் கைப் புத்தகமும் வரப்பெற்றோம்.

அவை வழக்கம்போற் சிறப்புற அமைந்திருக்கின்றன. —:—

## சிங்களத்தில் தபால் நாள் முத்திரை

தபாற் கந்தோர்ப் பெயர் நாள், நேரம் ஆகியவற்றைத் தபாலிற் காண்பிக்கும் நாள் முத்திரை, ஆங்கிலத்துக்குப் பதிலாய்ச் சிங்களத்தில் அமைக்கப்படுகின்றதாம். இது தனிச் சிங்களப் பகுதிகளுக்கெனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது ஆனல் தமிழ்ப் பகுதிபற்றி ஒன்றும் கூறப்படவில்லை.

# வாழ்க்கை வானில்

— வளர்மதி

### நம்நாட்டில் மின்சாரத்தை நம்ப முடியாது

மின் எனத் தோன்றி மறையும் வேடிக்கை யாழ்ப்பாண மின்சார சேவையிலே அடிக்கடி காணப்படுகின்றது. எப்பொழுது மறுக்கும் என்று எவராலும்சொல்லமுடியாது. கலியாணப் பந்தலிலே சுப வேளை பார்த்துச் சொல்லாமலே வேலை நிறுத்தஞ் செய்துவிடும் என்றால் மின்சாரத்தின் குறும்புத் தனத்தை என்னென்றுரைப்பது? சில நாட்களுக்கு முன் ஒரு பிரசவ வைத்திய சாலையிலே வைத்தியர்கள் பிரசவஉதவிக்கு ஆயத்தப்படுத்தும் அக்கணத்தில் 'மின்' மின் என நின்றுவிட்டதாம். மின் மினிப் பூச்சியின் வெளிச்சத்தை நம்பினாலும் மின்சார விநியோகத்தை எதிர் பார்த்திருப்பது அசாத்தியம் ஆகின்றது.

### 'சிமெந்து' விலை ஏறக் கூரையும் விழுந்துவிட்டது

முன்னொருமுறை காங்கேசன் சிமெந்துச்சாலைக் கூரை குழப்படி செய்தது. முன்னைப் பிரதமர் அங்கு முதல் முதலாக வந்தபொழுதே அந்த விபத்து நடந்தது. அரசியல் கட்சிபேதங்கள் அந்த நிகழ்ச்சியை மனம் போனவாறு பயன்படுத்தின. ம. ஐ மு. வந்த பின்பு காங்கேசன் சாலைக்கு அட்டமத்திலே கெட்ட கிரகங்கள் வந்துவிட்டன. சிமெந்து செய்வதற்கு வேண்டிய சிலபொருட்கள் இல்லையாம். சிமெந்தும் யாழ்ப்பாணத்தவர்களுக்குக் கிடையாதாம். விலையும் ஏற்றமாம். இப்படியானல் சாலைதான் பொறுக்குமா........? கூரை இருந்து என்ன, இல்லாமலென்ன? புதன்கிழமை நண் பகலில் சிமெந்துச்சாலைக் கூரை கீழே இறங்கிவிட்டதாம்!

## நாற்றிசையும் போற்றிய நாகசுரக் கலை அரசு

### வித்துவான் T N.. இராசரத்தினம்பிள்ளை நினைவுவிழா

———:0:———

நாகசுரக் கலை அரசாக உலகப் புகழ் வாய்ந்த திருவாவடுதுறை **வித்துவான்** இராசரத்தினம்பிள்ளையின் மறைவு குறித்து அகில யாழ்ப்பாண இசையாளர்களும் இசைக் கலை இரசிகர்களும் இன்று வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் ஒரு நினைவுக்கூட்டம் நடத்துகின்றார்கள்.

வடமாகாண அதிபதி திரு. ம. ஸ்ரீ காந்தா அவர்கள் தலைமை வகிக்கின்றார். அநுதாபக் கூட்டத்தின் பின் திரு. இராசரத்தினப்பிள்ளையின் உருவப் படம் நகர வீதிகளில் ஊர்வலமாக எடுத்துச்செல்வதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

சென்ற ஞாயிற்றுக்கிழமை மாவைக் கந்தசாமி கோவில் வீதியில் ஒரு அநுதாபக்கூட்டம் நடைபெற்றது. ஆசிரியர் திரு. வே. தியாகராசா தலைமை வகித்தனர். திருவாளர்கள்: ச. அம்பிகைபாகன், வே. சங்கரப்பிள்ளை R. N. சிவப்பிரகாசம், S. R. ஞானசுந்தரம் ஆகியோர் பேச்சு நிகழ்த்தினர்.

இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கத்தின் முயற்சியினல் இக்கூட்டம் நடைபெற்றது.

# நாவலரின் சேவை நற்பயன் அளித்தே வருகின்றது

———:0:———

[3-ம் பக்கத் தொடர்ச்சி] உலக மக்கள் சிற்றங்கொமுதலாம், இரண்டாம் சைவ வினாவிடை என்ற நூல்களாகச் செய்துதவினார். கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றின்மீது அளவு கடந்த பிரீதியுடையவர். இவற்றைக் கற்றோரும் மற்றோரும் எளிதில் விளங்கும் வண்ணம் இலகுவான வசன நடையில் ஆக்கித் தந்தார். நாவலர் அவர்களுக்குப்பெரிய புராணத்தின்மீது உயிர். இதன் உண்மைகளையும், உட்பொருள்களையும் தேவார, திருவாசக, சித்தாந்த சாஸ்திர மேற்கோள்களுடன் வசன நடையில் விளக்கிச் சூசனமாகச் செய்து புராணத்தின் மேன்மையை யுணர்த்தியுள்ளார். அச்சூசனத்தைக் கற்றால் நாவலர் அவர்களுக்குப் பெரிய புராணத்தின்மீது எவ்வளவு பிரீதியிருந்ததென்பதை அறிந்து கொள்ளலாம்.

பெரிய புராணத்தின் மேன்மையைப்பற்றி அவர் கூறுவதாவது:- சைவத்தின் வழி நின்றவரே சிவானுக்கிரகத்தால் பரமுத்தி பெறுவர். புறச் சமயத்தில் நிற்பவர் அவ்விடத்திற் செய்த புண்ணிய மிகுதியால் பின் வைதிக மார்க்கத்திலே புகுந்து, வேதாகமங்களின் வழி ஓங்கி பரமுத்தி பெறுவர். அவ்வழி தவறியோர் பூமியில் மீண்டும் பிறந்து சிவஞானத்தைப் பொருந்திப் பரமுத்தியாகிய சிவசாயுச்சியத்தை யடைவர். பெரியபுராணம் இவற்றை விளக்கும் இலக்கியமாகும்.

சைவசித்தாந்தத்தாலன்றிப் பரமுத்தி சித்தியாது என்பதும், அப்பரமுத்திக்குச் சாதனம் சிவஞானமே என்பதும், அச் சிவஞானத்தைப் பயப்பன சரியை முதலிய மூன்றுமே யென்பதும், வேதத்துள் விதித்த வேள்வி முதலியனவெல்லாம் அநித்தியமாகிய காமியங்களைப் பயப்பன என்பதனையும் தர்க்கரீதியான முறையில் எடுத்து விளக்கியுள்ளார்.

மேலும் அதுபற்றி அவர் கூறியிருப்பதாவது:- இப்பெரியபுராணமாவது தன்னையுணர்ந்தவர்களுக்கன்றி மற்றவர்களுக்குத் தமிழ் வேதமாகிய தேவாரத்தின் வரலாறும் மகிமையும் போல் ஒரோவிடங்களில் அதன் பொருள் விளங்குதல் கூடாமையானும், தன்னை அத்தியந்த ஆசையுடன் ஓதுவோர்க்கும், கேட்போர்க்கும் பத்தி வைராக்கிய ஞானங்களைப் பயக்குங் கருவியாய் இருத்தலானும், சிவஞானசித்தியார், திருக்களிற்றுப்படியார் முதலிய சைவ சித்தாந்த நூல்களிலும், உரைகளிலும் சிவானுபவத்துக்குத் தான் கூறும் நாயன்மார் பலருடைய சரித்திரங்களில் உதாரணங் காட்டுதலானும், சர்வாதிகாரிகளாகிய ஆதிசைவருக்கும் பிறருக்குந் தான் அதிகரித்த தனியடியார் அறுபத்துமூவரும் தொகையடியார் ஒன்பதின்மரும் ஆகிய திருத்தொண்டர் எழுபத்திருவருடைய சரித்திரங்களையும் உணர்ந்து அவர்கள் மகிமையைத் தெரிந்தாலன்றிச் சிவாலயங்கள் எங்கும் முறையே அவர்களுக்குப் பிரதிட்டை பூசை, திருவிழாக்கள் செய்தற்கண்ணும் ஊக்கமும் அன்பும் நிகழாமையானும், சைவர்கள் யாவரும் ஒருதலையாகக் கற்றுணரவேண்டிய நூலென்று வற்புறுத்திக் கூறியிருக்கின்றார். இவரது இவ்வரிய முயற்சியால் சைவத்தின் உண்மைகளை யாவரும் அறிந்து அதன்வழி நிற்க இது ஏதுவாயிற்று. இன்றும் அதன் பெருமை சொல்லுந் தரத்ததன்று.

— வளரும்.

## சுயசு நிலைமை திருந்தியது

சுயசுப் பகுதியிலிருந்த பிரித்தானிய பிரெஞ்சுப் படைகள் முழுதும் வெளியேறி விட்டனவாம். இப்பொழுது ஐ. நா. படைகள் அவ்விடத்திலிருக்கின்றன. அதனல் எகிப்தியர் திருப்தியடைந்துள்ளனர்.

## ஐந்து பேருடன் ஆட்சியாம்

கொழும்பு நகரசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 18 இடங்களிலும் அரசாங்கக்கட்சி(சி. ம. மு.) 5 இடங்களிலும் வெற்றி பெற்றன. முதல் மந்திரி ஸ்ரீ பண்டாரநாயக கொழும்பில் நடந்த கூட்டமொன்றிற் பேசும்போது ஐ. தே. கட்சியினர் பதினெட்டுப் பேராயிருந்தபோதும் ஐந்து அங்கத்தவர்களுள்ள தமது கட்சியே ஆட்சி செய்யுமென்று கூறினாராம்.

# நாட்டின் சிறந்த செல்வம்

1-ம் பக்கத்தொடர்ச்சி

இளஞ்சிறாரில்தான் எதிர்காலச் சமுதாயம் தங்கியிருக்கிறது. சைவப் பெற்றோர்கள் விபூதி அணிகின்ற பழக்கமுள்ளவர்களாகவும், ஒரு கிழமைக்கு ஒருதரமாயினும் திருக்கோயிலுக்குப் போய் தெய்வ வணக்கஞ் செய்கின்றவர்களாகவும், வீட்டில் காலையிலும் மாலையிலும் சுவாமிப் படம் வைத்துப் பூசித்துத் தேவார திருவாசகம் ஓதுகின்ற பழக்கமுள்ளவர்களாகவும்வாழ்ந்தால் பிள்ளைகளும் அத்தகைய பழக்கமுள்ளவர்களாக வாழப் பழகுவார்கள். பெற்றோர்கள் தீய பழக்கமுள்ளவர்களாய்ச் சமய அனுஷ்டானத்தில் சிரத்தையில்லாதிருந்து பிள்ளைகளை மாத்திரம் நல்ல பழக்கமுள்ளவர்களாக வரவேண்டுமென்று அவாவுதல் மிகுந்த அறியாமையாகும். வீட்டிலேதான் குழந்தைகள் தங்கள் ஓய்வு நேரம், இராக்காலம், விடுதலைகாலம் முதலியவற்றைச் செலவழிக்கின்றனர். தமது கல்வி பயிலும் காலத்தில் பெரும்பகுதி நேரத்தை வீட்டிலேதான் போக்குகிறார்கள். ஆகையால் வீடும், அதன் சூழலும் மிகவும் தூய்மையாயிருக்கவேண்டும். வீட்டிற்கடுத்ததாய்வித்தியாலயம் சிறப்புடையது. குழந்தைகளை நல்ல சிறந்த வழிகளில் உருவாக்குவதில் வித்தியாலயம் முக்கிய பங்கு எடுக்கின்றது கிராமத்திலுள்ள ஓர் பாடசாலை, ஓர் கல்லூரி அதற்கு ஒரு தீபம் போல விளங்கவேண்டும். வித்தியாசாலையும் ஒரு ஆலயமாக அமைய வேண்டும். சைவ ஆசிரியர்கள் சைவ அனுஷ்டானமுள்ளவர்களாக சைவப் பற்றுடையவர்களாக தூய வாழ்வுடையவர்களாகத் திகழ்ந்தால் பிள்ளைகளும் அவர்களைப் பின்பற்றி வாழ்வார்கள். ஆசிரியரின் நல்லொழுக்கம் மாணவர்களின் நல்லொழுக்கத்திற்கு அவசியம்தேவையானது.ஆன்மா சார்ந்ததின் வண்ணமானது. குழந்தைகள் சார்ந்ததின் தன்மையைப் பொறுத்தே வளர்ச்சியுறுவார்கள். ஒவ்வொரு வித்தியாசாலையிலும் ஒரு அறையாயினும் அமைத்து அதில் சுவாமி படம் வைத்துப் பூசைசெய்யவேண்டும். ஒவ்வொரு நாளும் அல்லது கிழமைக்கு ஒருதரமாயினும் எல்லா மாணவர்களும் ஒருங்கு கூடிப்பிரார்த்தனை நடாத்தவேண்டும். அப்பர் சுந்தரர், சம்பந்தர், மணிவாசகர் முதலிய சமயகுரவரதும், ஆறுமுகநாவலர் பெருமானதும் குருபூசைத் தினங்களும் நவராத்திரி, சிவராத்திரி முதலிய சைவத் திருநாட்களும் செவ்வனே கொண்டாடப்பட வேண்டும். சைவப் பிரசங்கங்கள் வித்தியாசாலையில் நடைபெற வேண்டும். ஒரு வித்தியாசாலை தெய்வஒளியை தெய்வ நம்பிக்கையை, நல்லொழுக்கத்தை சிறந்த பண்பாட்டை மக்களுக்குப் பரப்பும் ஒரு மின்சார

நிலையம்போலத் திக
வேண்டும். இத்தகை
சூழலில் மாணவர்கள் வா
வார்களானல் அவர்க
எதிர்காலத்தில் நாட்டி
சிறந்த செல்வமாக விள
குவார்கள். வித்தியாலய
த்திற்கு அடுத்தாற்போ
திருக்கோயில் சிறப்பா
நடைபெறவேண்டும். திரு
கோயில் ஒரு குழந்தை
நல்லவனாக உருவாக்கு
தில் ஒரு முக்கியபங்கு எ
கின்றது. திருக்கோயிலி
நித்திய நைமித்திய பூ
கள் செவ்வனே நடைபெ
வேண்டும். திருக் கோ
வில்லாத ஊர் காட்டிற்கு
சமமாகும், ஒவ்வொ
கிராமத்திற்கு ஒருகோயி
இருக்கவேண்டும். அதி
வேதாகமமுறைப்படி பூ
நடைபெற வேண்டும்.
திப்பாடல் கூட்டுப் பிரார்
தனைகள் நடைபெறவே
டும். பக்திப் பாடல்களி
சிறுவர்கள் பங்
பற்றவேண்டும். திருக்கோ
யில் மண்டபத்தில் சை
சமயப் பிரசங்கங்கள்வா
தோறும் அல்லது மாத
திற்கு ஒருதரமாயினு
நடாத்தப்பட வேண்டு
பண்டைக்காலத்தில்
லவ சோழ அரசர்கால
தில் தமிழ்நாட்டின் ஆ
யங்கள் உயர்ந்த கலை
பீடங்களாக விளங்கி
இத்தகைய சூழலில் ஒ
மாணவன் நல்ல ஒரு ம
னாக உருவாகுவான் என்
தற்கு ஐயமில்லை. குழ
ந்தைகளே நாட்டின் சிற
செல்வம் வீடு, வித்தியா
யம், திருக்கோயில, மேலே
கூறியபடி ஒத்தியங்கின
தான் எதிர்காலத்தில் ந
செழிக்கும் நமது நாடு
வழிகளிலும் சிறப்புற்
ஓங்க வேண்டுமானல், கு
ந்தைகளைச் சிறந்த நெ
யில் உருவாக்க வேண்டு
னல் நாட்டில் கொலை
லிய குற்றங்கள் குறைந்
பொறுமை, போட்டி மன
பான்மை தேய வேண்
மானல், பெற்றோர்கள் ஆ
ரியர்கள், கோயில் பூச
கள் தம்கடமைகளை உ
ர்ந்து செய்யவேண்டும்.
"மேன்மைகொள் சைவநீ
விளங்குக உலகமெலாம்

## இந்திய அமெரிக்க ஒற்றுமை

அமெரிக்க சனாதிபதி
ஐசன்ஹோவரும் இந்தி
முதல் மந்திரி பண்டிதநே
வும் நடத்திய ஆராய்ச்சி
பேச்சுக்களின் முடிவுகள்
பெரும் கருத்தொற்று
கண்டனராம். அவர்க
இருவரும் ஒருமித்து வெ
யிட்ட அறிக்கையில் உ
கின் பல பெருங் கரு
கள் ஆராயப்பட்டன எ
றும், அவற்றின் முடி
வில் அமெரிக்காவுக்கு
இந்தியாவுக்கும் இடை
நெருங்கிய நட்புறவுண்டா
கத்தக்க கருத்தொற்று
கள் காணப்பட்டன வெ
லும் அக்கருத்தொற்று
கள் உலக சமாதான
உண்டாக்கும் முயற்சிக
குப் பேருதவி புரியுமெ
றும் குறிப்பிட்டிருக்கின்
னர்.


# கம்பராமாயணம்

(யுத்தகாண்டம்)

## கும்பகருணன் வதைப்படலம்

(ஒன்று முதல் 170 பாட்டுக்கள்)

— யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் வெளியீடு —

பரமேசுவரக் கல்லூரித் தமிழ்விரிவுரையாளர்,
வித்துவான், பண்டிதர், சைவப்புலவர், **க. வேந்தனார் அவர்கள்** எழுதிய
விளக்கவுரையுடன் வெளி வந்துவிட்டது

- ஒவ்வொரு பாட்டிற்கும், கொண்டு கூட்டு, பொருள், பொழிப்பு, விளக்கம், குறிப்பு எனும் உறுப்புகள் அமைய உரை எழுதப்பட்டுள்ளது.
- விளக்கத்தில் செய்யுள் நயம் விரிக்கப்படுகின்றது. செய்யுளை உணர்ந்து உணர்ந்து தீட்டிய உரை நயம் மாணவர்க்கு நல் விருந்தாகும்.
- உவமான உவமேய விளக்கம், மாணவர் உள்ளத்தில் பதியக் கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளது.

**இத்துடன்,**

170 பாட்டுக்களையும் அவற்றின் பொருள்நிலைக்கு ஏற்பப் பத்தொன்பது பிரிவுகளாக வகுத்து, அப் பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி தலையங்கங்கள் கொடுத்துப் பின் ஒவ்வொரு பிரிவுகளின் கீழ் உள்ள பாட்டுக்களின் பொருளையும் தொகுத்துத் தெளிவான உரைநடையில் எழுதப்பட்டுள்ளது. இதனல் மாணவர்கள் மிக எளிதாகப் பாட்டின் பொருளை விளங்கிக்கொள்வார்கள்.

மாணவர்கள் தாமாகவே படித்து, இலக்கியத்தை நயத்தற்கு வழிகாட்டும் வாய்ப்பான உரை.

# நாவலரின் சேவை
## நற்பயன் அளித்தே வருகின்றது

———:0:———

1-ம் பக்கத் தொடர்ச்சி

டை, தலைப்பாகையோடு முன்பு மதிப்பாக ஒரு கும்பிடு போட்டு "சிவனே என் காரியம் பலித்தால் உன்னை நம்புவேன்" என்று கூறியவர்கள் இப்போதெல்லாம் "எல்லாம் சிவன் செயல்" என்பதை நம்பி, மேல் வேட்டியை இடுப்பில் கட்டிக்கொண்டு, பயபக்தியுடன் சிவனை வணங்குகின்றனர்; பிழைப்புக்குக் கற்ற ஆங்கிலப்படிப்பினால் பிடிப்புண்டு நமதருள் நூல்களை அலட்சியம் செய்தவர்களும் நாவலர் விரிவுரை, சொற்பொழிவுகளை வணக்கத்துடன் கேட்டனர். "உடலே உறுதி, கண்டதே காட்சி" என்ற வாருக சிரோமணிகளும் உடலின் நிலையாமையை உணர்ந்து சீவனுள்ள போதே சிவநேசச் செல்வந் தேடினர். இவ்வாறு பல சமயச் சீர்திருத்தங்கள் நடந்தன.

நாவலர் வாக்கைக் கேட்டவர் வாழ்வே புதுமைபெற்றுப் புனிதமானது; கருமிகள் தருமவான்களானார்கள்; காமிகள் சிவகாமிகளானார்கள்; தாசிலோலர் வீபசாரத்தை விட்டொழித்தனர். பெண் பித்தர் ஒரு மனைவியுடன் இல்லறமாகிய நல்லறம் பூண்டொழுகினர்; துன்மார்க்கிகள் சன்மார்க்கிகளானார்கள்; பொய்யர் மெய்யரானார்; பசுக்களைத் துன்புறுத்தியவர்கள் அன்புடன் பரிந்து பசுக்களைப் பேணினர். காலத்தை வீணாக்கியவர்கள் இப்போது கல்வி வளர்ச்சியில் செலவிட்டனர். சிலர் நாவலர் பள்ளிக்கூடத்திலேயே சேர்ந்து முறையாகத் தமிழும் சைவமுங் கற்கத் தொடங்கினர்.

### கடல் கடந்த புகழ்

இவ்வளவு அரிய பெரிய காரியங்களைத் தூண்டிய சொற் கொண்டலான இப்பெரியார் புகழ் இலங்கையைத்தாண்டி இந்தியாவிலும் பரவியது. அவர்கள் அழைப்பிற்கிணங்க சென்னைக்குப் பயணமானார். அக்காலத்தில் வேதாரணியத்தின் வழியாகவே பிரயாணஞ் செய்வது வழக்கம். நாவலர் அவர்கள் வேதாரணியத்தில் அடி வைத்ததும் "வருக! திருநெறிச் சைவந்தழைக்க வந்த பெருஞ்சொற் புலவர் வருக" என்று வரவேற்றனர். தமிழ்நாடெங்குஞ் சென்று தன் சமயப் பணியைச் செய்தார்.

அக்காலம் திருவாவடுதுறை ஆதீனம் சைவ ஒளியும், தமிழ் மணமும் பரப்பியது புலவர்களுக்கெல்லாம் அது நாயகம் போன்றிருந்தது. அங்கே விளங்கிய பண்டார சந்நிதிகள் அம்பலவாண தேசிகர். அவர் பெரும் புலவர்; முத்தமிழ்வித்தகர்; அவருக்குக்கீழ் சின்னப்பட்டத்தில் இருந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் செந்தமிழ்க் கற்பகம். புலவர் பெருமை உணர்ந்து மரியாதை செய்யும் புண்ணியர். மீனாட்சிசுந்தரம்பிள்ளைக்கு 'மகாவித்துவான்' பட்டமீந்து திருவாவடுதுறையில் வைத்து ஆதரிக்கச் செய்த வள்ளல் இவரே.

ஆறுமுகனார் திருவாவடுதுறைக்கு வந்ததும் தேசிகர் முகமலர்ந்து, நல்வரவு கூறிப் பண்டார சன்னிதிகளுக்கு அறிமுகப்படுத்தினார். புலவரின் அறிவாற்றல்களை அவர்கள் அறிந்து கொண்டனர். இலக்கண இலக்கியங்களிலும், சித்தாந்த சாஸ்திரங்களிலும் அவர்கள் கேட்ட ஐயங்களுக்குத் தக்க விடையிறுத்தமை அவர்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. புலவர் புலமையைமெச்சினர். உடனேயே சைவசித்தாந்தத்தைப்பற்றிப் பிரசங்கஞ் செய்யும்படி வேண்டிக்கொண்டனர். நல்ல சுபநாளில் ஆதீன வித்துவான்களும், பிற புலவர்களும், அன்பர்களும் கூடிய சபையில் நம் புலவர்மணி தேவாரத்தையும், மெய்கண்ட சாஸ்திர நூல்களையுங் கொண்டு "பதி, பசு, பாச விளக்கம்" என்ற அரியதோர் சொற்பொழிவாற்றினார். அவரது தூய செந்தமிழும், எளிய இனிய நடையும், பொருட்செறிவும், உள்ளக் கிளர்ச்சியும், சிவபக்தியும், ஆகம ஞானமும், சைவாவேசமுங் கண்ட சபை அப்படியே வியந்து சித்திரப்பாவையானது. இப்படிப்பட்ட பிரசங்கத்தை முன்னொருபோதும் கேட்டதில்லையென்று ஒவ்வோருள்ளமும் பேசிற்று. நமச்சிவாய தேசிகரும், சிவஞானமுனிவரும், கச்சியப்பரும் விளங்கிய அந்த ஆதீனம் இச் சொற்பொழிவால் பெருமை பெற்றது. அம்பலவாண தேசிகரும் வித்துவான்களுடன் கலந்துகொண்டு, நம்புலவர்மணியின் நாவன்மையைப்போற்றி "நாவலர்" என்ற பட்டத்தை யளித்தனர் இதனால் இவரது தமிழ்ப்புலமையையும், சைவ அறிவையும் தமிழகம் நன்கறிய முடிந்தது தமிழகத்தில் எத்தனையோ நாவலர்களிருந்தும் "நாவலர்" என்றவுடனே நம் ஆறுமுக நாவலர் அவர்களையே குறிப்பதாயிற்று. என்னே! அவரது பெருமை.

"தோன்றிற் புகழொடு
தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை
நன்று"

என்னும் வள்ளுவர் வாக்குக்கு இலக்காகத் தமிழ் நாட்டில் வந்துதித்தவர்களுள் தலையாயவர் நாவலர் பெருமான் என்றால் அது மிகையாகாது.

### நாவலர் பிரசுரங்கள்

நாவலர் அவர்கள் உறுதி பூண்ட மூன்று விஷயங்களுள் இரண்டாவது - ஓர் அச்சுப் பொறிவைத்து நல்ல நூல்களை அச்சிட்டு வழங்குதல். அவர் தாம் மனத்திற் கொண்டபடி சைவ சமய நூல்களைத் திருத்தியும், புதுக்கியும் வெளியிட்டார் சைவத்தின பொருளைச் சுருக்கமாக விளக்கி வினா விடைகளாக

# பாதுகாப்புக்குச் சிறந்த படை?

## உலக மக்களின் எண்ணமேயன்றி இராணுவமல்ல!

### ஐ. நா. சபையில் பண்டிதநேரு அறிவுரை

அமெரிக்காவுக்குச்சென்றிருந்த பண்டித நேரு அவர்கள் ஐக்கிய நாட்டுச் சபையின் நிருவாகசபை ஒன்றிற்பேசுதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அவர் பொதுச் சபையிற் பேசவேண்டுமென்று பலர் விரும்பினர். அவ்விருப்பின்படி பண்டித நேரு அவர்கள் சிறந்த அறிவுரை ஒன்றைப் பொதுச்சபையில் நிகழ்த்தினார். அவர் பேசும்போது ஹங்கேரிய, எகிப்திய நிலைமை பற்றிக் குறிப்பிட்டு, கெடுதியான செயல்களை உலக மக்கள் பொறுத்திருக்கமாட்டார்கள் என்பதை அவை நிரூபித்து விட்டன என்றுகூறினார்.

அவர் மேலும் பேசும்போது வலிமிக்க நடாயிருந்தாலென்ன, வலி குன்றிய நாடாயிருந்தாலென்ன

தொடர்ச்சி 4ம் பக்கம்

ள்ளக்கூடிய செயலைப் புரியுமுன்னர் எவரும் இருமுறை ஆலோசித்தல் வேண்டும். கெடுதி விளைவிக்கும் செயல்களை மக்கள் சகியார் என்பதை அண்மையில் நிகழ்ந்தவை நிரூபித்துள்ளன. பிழையானவற்றைச் செய்யும் நாடும் தன்னை ஒரு சிலராவது ஆதரிப்பர் என்று நம்பியே அப்படிச் செய்கின்றது. எத்தகைய வலியுள்ள நாடாயிருந்தாலும் பிழை செய்யும்பொழுது ஆதரிக்கப்படமாட்டாது. இதனாலேயே வலிமிக்க நாடும் விரும்பியதைச் செய்ய முடியாதிருக்கின்றது. எனவே பிழையான செயல் புரியும் நாட்டிலிருந்து எம்மைப் பாதுகாக்க நாம் சிறந்த வழிவகையினைக்கண்டுவிட்டோம். ஆயுதத்தைத் தூரத்தில் வீசிவிட்டு இதனையே எமது படைக்கலமாகக் கொண்டால் என்ன? இராணுவ ஒப்பந்தங்களை விலக்கிவிட்டு, நேரடியாகப் பேசி எமது பிணக்குகளைத் தீர்த்தால் என்ன? சச்சரவு இருந்தால் சமரசப் பேச்சால் அதனைத் தீர்த்தல் கூடாதோ?

ஹங்கேரிய, எகிப்திய சம்பவங்கள் சரித்திர வரலாற்றில் புதிய அத்தியாயத்தினைக் காட்டுகின்றன. நாள்தோறும் இம்மாற்றத்தின் அறிகுறிகளைக் கண்டோம். இப்புதிய நிலைமையினை நாம் இன்று ஆராய வேண்டும். கோபத்தையொழித்துச் சாந்தத்துடனேயே நாம்பேசல் வேண்டும். எவரையாதல் இழிவுபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தைக் கைவிட்டுவிடவேண்டும். எதிரியுடன் பேசும்போது அவனை நண்பன் என்றே கருதவேண்டும். குறுகிய மனப்பான்மையுடன் நாம் எதையும் நோக்குதல் தப்பாகும். இதையே காந்திஜி எமக்குப் புகட்டினார் என்று கூறினார். இவ் வறிவுரை சபையோரால் பெரிதும் வரவேற்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# சீர்கெட்ட உலகநிலை

## தத்துவ மகாநாட்டில் காரண விளக்கம்

அண்ணாமலை நகரில் நடந்த தத்துவ மகாநாட்டைப் பேராசிரியர் ஹுமாயூன் கபீர் அவர்கள் தொடங்கிப் பேசும்போது இப்பொழுது இருக்கும் சீர்கெட்ட உலக நிலையானது வாழ்க்கைத் தத்துவத்தின் சிறப்பு அம்சங்களை நாம் புறக்கணிப்பதின்விளைவுதான. உலகவரலாற்றிலேயே இப்பொழுது இருப்பதைப்போல்பொருள்களைப்பற்றிய அறிவு முன்னர் இருந்ததில்லை. அதே போன்று மனித உள்ளம் எவ்வாறு வேலை செய்கின்றது என்பதைப்பற்றியும் இப்பொழுது இருப்பதைப் போன்ற அறிவு முன்னர் இருந்ததில்லை. எனினும் பாமர மக்களின் அறியாமையை அறிவுள்ளவர்கள் எவ்வாறு பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர் என்பது அண்மையில் சில ஏகாதிபத்திய நாடுகள் நடந்துகொண்ட முறையிலிருந்து புலனாகும். ஆத்மீக வளர்ச்சிக்குத் தற்பொழுது ஏற்பட்டிருப்பதைப் போல் வேறு எப்பொழுதும் நெருக்கடி ஏற்பட்டதில்லை.

தத்துவத்தின் சிறப்பை நாம் உணராது, உடனடியாகப் பயனளிக்கக்கூடிய முறைகளைக் கையாளுவதால் நம்நிலை சீர்கெட்டு வருகின்றது. இறுதியில் செய்கையைத் தூண்டும் சிறப்பு அம்சங்களை நாம் மறந்து விடுகிறோம். அறிவை அளவுகோலாக வைத்துக்கொண்டாலும், தத்துவம் மதிப்பில் குன்றிவிடாது. கற்பனைச் சக்திக்கு வரம்பே கிடையாது.

அறிவைப் பற்றிய ஒவ்வொரு புது அம்சமும், புதுத் தத்துவ விளகத்திற்கு வழிகோலும் மனித உள்ளத்தின் சிறப்பு அம்சங்களைப்பற்றி இன்னும் ஒருவரும் சரிவர விளக்கம் கூறமுடியவில்லை ஆனால் வெறும் உண்மைகளைவிட உள்ளச் சிறப்பு மேம்பட்டது என்பதை எவரும் மறுக்க முடியாது.

அணுக்களின் அமைப்பையும், கருத்துக்களையும் அறிவுக்குப் பொருத்தமாக விளக்கி விடலாம். ஆனால் உள்ளத்தின் உணர்ச்சிகளை அவ்வளவு எளிதில் விவரிக்க முடியாது.

உள்ளக் கருத்துக்கள் உண்மைகளைப் பயக்கின்றன. உள்ளத்தைப்பற்றி நாம் ஆராயும் பொழுது மானிடரின உற்பத்தியும், முடிவும் அதில் மறைமுகமாக இருப்பதை நாம் உணரலாம். இலௌகீகத்தைக் கையாளும பல தததுவ ஞானிகளும்கூட உள்ளத்தின் உணர்ச்சிகளைப் பற்றி முடிவான சில நிரூபணங்களை முடிவில் ஏற்கவேண்டியிருக்கிறது. உள்ளச் சிறப்புகளை அறிய மனிதனுக்கு ஆவல் இருக்கும்வரை தத்துவத்தின் பல துறைகளுக்கும் மதிப்பு இருக்கத்தான் செய்யும் என்று கூறினார்.

# சேய்க்குத் தாயின் உதவி

## மொழிப் பாதுகாப்புக்கு உலகசம்மேளனம்

"கல்கி" உதவி ஆசிரியர் திரு. கி. மகாலிங்கம் (பகீரதன்) அவர்கள் வண்ணை வைத்தீசுவர வித்தியாலயத்திலே பேசும்போது தமிழ் பேசும் மக்களின் மொழி கலாசாரத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் தமிழ் மொழிக்கு அதன் பண்டைய பெருமை மறுபடி ஏற்படவேண்டுமானால் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய உலகசம்மேளனம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும், தமிழகம், சேயகமான இலங்கைத் தமிழகத்தை எச்சமயத்திலும் மறக்கமாட்டாது. இங்கு தமிழுக்கு எப்பொழுது இழுக்கு ஏற்படுமானாலும் தமிழ்க் கொடி அங்கிருந்து பறந்து வருமென்பது நிச்சயம். தமிழர் துன்புறுத்தப்படுவதைத் தமிழ் நாடு ஒருபோதுமே பார்த்துக் கொண்டிருக்காது. எந்தச் சமயத்திலும் தமிழகத்து மக்களின் உதவி ஈழத் தமிழர்களுக்கு நிச்சயம் கிடைக்கும் என்பதை நீங்கள் உறுதியாக நம்பலாம் என்று கூறினார்.

# மணிவாசகர் செய்ததை மனத்திற்கொள்ளுங்கள்

## வட்டக்கொடையில் திருவாதிரைத் திருநாள் அறிவுரை

மார்கழிமாதம் பிறந்ததும் வட்டக்கொடை மடக்கும்பற, கைப்புகல பூண்டுலோயா முதலிய மலைநாட்டுப் பகுதிகளில் தெருவெலாம் தேவார திருவாசக முழக்கம்; சங்குநாதம், சேமக்கல ஓசை, வீணை இசை, மத்தள முழக்கம், கெஞ்சராக் கீதம் எல்லாம் மிகுந்து பாரதியின் கனவு இன்று இங்கு நனவாயிற்று.

திருவாதிரைத் திருநாளிலே (புதன்கிழமை 19-12-56) வட்டக்கொடை கணேசர் ஆலயத்தில் விசேஷ பூசையும் ஆராதனையும் நடைபெற்றன.

திருவெம்பாவைப் பாக்கள் அதிபக்தி சிரத்தையுடன் பாடப்பட்டன. வட்டக்கொடைத் தமிழ்ப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையில் பெருந்திரளாகக் கூடியிருந்த தோட்டத் தொழிலாளர்களும் பங்கு பற்றினார்கள்.

தமிழ் முன்னேற்றச்சங்க உபதலைவர் திரு. அ. சபாபதிப்பிள்ளை அவர்கள் "மாணிக்க வாசகரும் திருவாசகமும்" என்ற விடயம் பற்றி ஒரு சொற்பொழிவாற்றினார். அன்னார் பேசுகையில் திருவாசகம் தேனினும் இனியது. இதனுள்ளே சைவசித்தாந்தப் பொருள் எல்லாம் அடங்கியிருக்கின்றன. மாணிக்கவாசகர் தில்லையில் புத்தரை வாதில் வென்று அக்காலத்தில் சைவத்தை நிலைநாட்டினார். இப்பொழுது நாம் பத்திரிகை வாயிலாகப், "பல்லாயிரக்கணக்கான இந்துக்கள் பௌத்தர்களாக"மாறியதை அறிகிறோம். இந்த நேரத்தில் நாம் மாணிக்க வாசகரின் சரித்திரத்தை நினைவூட்டிக்கொள்வது நலமென்று கூறினார்.

திரு. எஸ் சோமசுந்தரம் பேசுகையில் 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்" என்ற முதுமொழியைக் கூறி விளக்கி "முத்திநெறி" என்ற திருவாசகத்தைப்பாடி அதன் உட்பொருளைப் பாமரமக்களும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் மிகவும் அழகாக எடுத்துரைத்தார். ஆயிரக்கணக்கான மக்கள் வந்து வழிபாடு செய்து இன்புற்றனர்.

### சென்னை ஆட்சி மொழி

தமிழ் மொழி சென்னை அரசாங்கத்தின் ஆட்சி மொழியாகின்றது. ஆயினும் நிலைமைக்கேற்றவாறு தற்காலிகமாக ஆங்கிலம் உபயோகிக்கப்படும்.

யாழ்ப்பாணம்

**ஐக்கிய இலாபநிதி**

**1918-ம் ஆ ஸ்தாபிதமானது**

வங்கிக்காரர் மூலநிதி **8** லட்சம் ரூபா.

இதுவரையிற் கோக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா

**616313,00**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை

என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

**S. கனகசபை**

சிறுப்பர்

Std 14

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

காரைதீவு மேற்கு எஸ். சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம் மைம்பெண் தெய்வானைப்பிள்ளை

இல, M B 1032

வழக்காளி

எதிராக

1 காரைதீவுமேற்கு கந்தப்பு கணபதிப்பிள்ளை

2 ஷையூர் பெண் விசாலாட்சி

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1032-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1957-ம் ஞு தை மீ 23 உ புதன்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்த அந்தக் காணிக்குள் நின்றுபிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 2352 25 ம் ரூபா 1500 க்கு 13-6-56 தொடக்கம் 11-9-56 வரை 7 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 197-85 சதம்.

காணி விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக்கோவிற்பற்று தங்கோடையிறை "வரம்பட்ட புலம்" பரநில.இல. ($10\frac{1}{4}$)பத்தேகால் எல்லை கிழககு கந்தப்பர் சுப்பிரமணியத்திற்குரியவாதனம் வடக்கு கந்தையா பெண் விசாலாட்சிக்குரிய வாதனம் மேற்கு காசிநாதர் சிவகுருவிற்குரிய வாதனம் தெற்கு தம்பிமுத்து விசுவலிங்கத்திற்கும் கந்தையா மகள் காமாட்சிக்கும் தம்பிப்பிள்ளை பெண் நாகம்மாவிற்குமுரியவாதனம். இதடங்கலிலும் மேற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றுப்பாகமும்.

2 ஷை தங்கோடையிறை "சல்லை;' பரநி இலா 5 1/4 ஐந்தேகாலும் பனைகளும் எல்லை கிழக்கு நாகமுத்து பெண் தெய்வானைக்கும் சின்னத்தம்பிவேலுப்பிள்ளைக்குமுரியவாதனம் வடக்கு ஆறுமுகம் பெண் விசாலாட்சிக்கு உரிய ஆதனம் மேற்கு வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளைக்குரியவாதனம் தெற்கு வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளைக்கும் சரவணமுத்து கண்மணிராசாவுக்குமுரியவாதனம் இதடங்கலும்.

1956-ம் ஞு மார்கழி மீ 5 உ

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்

காரைநகர்
M. 437 28-12-56 (து. 300)

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

1 கரம்பன் ஊர்காவற்றுறை விசுவலிங்கம்பொன்னுத்துரை

2 ஷையூர் பெண் கமலாம்பிகை

இல M B 1038

வழக்காளிகள்

எதிராக

1 சரவணை ஊர்காவற்றுறை குழந்தைவேலு கதிரேசு

2 ஷையூர் தெய்வானைப்பிள்ளை

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 1038-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1957 ஞு தை மாதம் 19 உ சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்த அந்தக் காணிக்குள் நின்றுபிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 1325-ம் ரூபா 800 க்கு 18-6-56 தொடக்கம் 10-9-56 வரை 15 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்குப் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 198-58 சதம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று சரவணை இறை "இத்திநின்ற மயிலப் புலமும் குழந்தையன் மயிலப்புலமும்" நில பர 20 1/8 இருபதேயரைக்காலும் வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றுக்பங்கும் கிணறும் மேற்கெல்லையில் நிற்கும் பனைகளும் வடலிகளும் எல்லை கிழக்கு குழந்தைவேலு கதிரேசுவினுதனம் வடக்கு முருகன் விசுவனுதனுக்கும் சின்னத்தம்பி பசுபதிக்குமுரிய ஆதனங்கள், மேற்கு மயில்வாகனம் இலிங்கப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் குழந்தைவேலு கதிரேசுவுக்குமுரிய ஆதனங்கள். தெற்கு ஐயனார் கோவிலுக்கும் சுப்பிரமணியஐயர் மகள் அன்னம்மாவுக்குமுரியவாதனங்கள். இதடங்கலு மிதற்குரியவைகளும்.

2 ஷை றை "ஆவரசம்புலம் அல்லது ஆவரசங்காடு" அல்லது கல்லிடிப்பன் இடிப்பனும் மறுபிரிவுகளும் "நிபர 35 முப்பத்தைந்து எல்லை கிழக்கு இலிங்கப்பிளை கனகலிங்கத்துக்குரியவாதனம் வடக்கு பண்ணை ரேட்டு மேற்கு வாய்க்காலும் ஒழுங்கையும் தெற்கு நல்லதம்பி காகலிங்கத்துக்குரியவாதனம். இதிற் சொரியலாய் (1/3) மூன்றிலொருபங்கு.

1956.ம்ஞு கார்த்திகைமீ 29 ம்உ

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்

காரைநகர்
M 438 28-12-56. (து 300)

# நாடு செழித்து முன்னேற வழி

## ஆன்மார்த்த அறிவு செறிந்த வாழ்க்கையின் அவசியம்

ஸ்ரீ சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் அக்கரு சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தும்போது மக்கள் வாழ்க்கை சிறப்படைதற்கு ஆன்மார்த்த அறிவுள்ள சமயவாழ்க்கை இன்றியமையாததாயிருக்கின்றதென்பதை மிகவும் வற்புறுத்திப் பேசினர். கடமை உணர்ச்சி முதலியனவும் பிறவுமான நல்லொழுக்கங்களெல்லாவற்றுக்கும் இது அத்திபாரமாயிருப்பதை இடித்திடித்துக் கூறிப் போந்தனர்.

அவர்பேசும்போது, எங்கள் தேசிய முன்னேற்றத் திட்டங்கள் சித்தியடைய வேண்டுமானல் கல்விப் பேறுடையோரிற் கடமை உணர்ச்சி மிகக் கூடுதலாக வேண்டப்படுகின்றது. நாட்டு மக்கள் நிலைமை திருந்துவதற்கு, வாழ்க்கையின் உண்மைத் தன்மை பற்றி, இலௌகீகத்துக்கும் சுயநலனுக்கும் புறம்பான தெளிந்த அறிவு, முதலாவது அத்திபாரப் பொருளாக வேண்டப்படுகின்றது.

ஒருபக்கம் சாராது நடுநின்று ஆராய்வோமானல், உலக நாடுகளின் சரித்திரத்தில் பிழையான வழிகளிற் செலுத்தும் பல்வேறு ஆசைகளை நீக்கி, வாழ்க்கையின் சிறப்புக்களைக் கண்டு, அவற்றிற் கேற்பத்திட சித்தத்துடன் சிறந்த வாழ்க்கை வாழ்ந்து, உயர்ந்த இலட்சியங்களுக்காக உயிர் துறந்த பெருமக்களுக்கு, உண்மை உணர்வை ஊட்டி வளர்த்தது சமயமேயாகும் என்பதை நன்கு காண்போம்.

(வளரும்

=o=

### சிங்கள சிறீக்கு ஒருமுக எதிர்ப்பு

தமிழரசுக் கட்சி, தமிழர் மகாநாடு, பொதுவுடைமைக் கட்சி ஆகிய மூன்று கட்சியினரும் சிங்கள "சிறீ' யை ஒருமுகமாக எதிர்ப்பதென்று ஒன்றுகூடித் தீர்மானித்துள்ளனராம்.

## தத்துவ அறிவால் மக்களுக்கு என்ன பயன்?

அண்ணாமலை நகரில் நடந்த தத்துவ மகாநாட்டில் தத்துவ அறிவு மக்களுக்கு எவ்வாறு உதவுகின்றது என்பதை கலாநிதி இராஷ்விகாரி தாஸ் அவர்கள் எடுத்து விளக்கினர். அவர் பேசும்போது, விஞ்ஞானம் சாதாரண அறிவைக் கொடுக்கும் நோக்கத்தைக் கொண்டது என்ருல், தத்துவம் கூர்மையான ஆழ்ந்த அறிவைத் தரவல்லது. சாதாரண அறிவைக் காட்டிலும் அது உயர்ந்தது. பிற்காலத்தில் ஸ்டாயிக் போன்ருேர் தத்துவம் ஒரு வாழ்க்கைக் கலை என்று வற்புறுத்தினர். இடைக் காலத்தில் சமய ஆசாரத்திற்குத் தத்துவம் உதவும் நிலையில் இருந்ததாகக் கருதப்பட்டது. தத்துவத்திலிருந்து மக்கள் அறிவுபெற விரும்புகிருர்கள் என்பதில ஐயமில்லை, ஆனல் சில சிறந்த நோக்கங்களுடன் அவர்கள் தத்துவத்தின் உதவியை நாடுகிருர்கள். இந்தியத்தத்துவத்தில் குறிப்பாக நாம் இதைக் காண்கின்ருேம். இங்கு தத்துவம் என்பது இன்னல் மூலமாகவும் மன நிறைவு இன்மையாலும் ஏற்பட்டதாகும். ஆனல் ஒருஉயர்ந்த நிலையை எய்துவதற்காக தத்துவம் பின்பற்றப்பட்டது. விடுதலை பெறுவதே இதன் உயர்ந்த கொள்கையாகும் என்றுகூறினர்.

### பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

அல்வாய் மேற்கு 1. செல்லையா சினிவாசகக்குருக்கள் 2. பெண் இராசம்மா
வழக்காளி.
இல. 5546
எதிராக

ஷியூர் :
1. சி. சதாசிவம், 2 பெண் தெய்வானைப்பிள்ளை, 3. கதிர்காமர் சின்னத்தம்பி, 4 வல்லிபுரம் சிதம்பரப்பிள்ளை, 5. கந்தையா கணபதிப்பிள்ளை 6, வேலாயுதர் சிங்கர், 7. சிதம்பரப் பிள்ளை முருகுப்பிள்ளை 8. சி. சிதம்பரப் பிள்ளை 9. பொன்னம்பலம் மாணிக்கதியாகராசா, 10 பெண் தங்கப்பிள்ளை, 11 சிதம்பரப் பிள்ளை நடராசா 12. வ. கதிர்காமத்தம்பி பூதல்வழக்கு தத்துவகாரி; கொழும்பு, வாட்பிளேஸ் செல்லம் கதிர்காமத்தம்பி, 13. முருகர் கதிரித்தம்பி, 14. இராமச்சங்கம் கட்டைவேலி. 15 கந்தப்பர் வல்லிபுரம், 16 வ. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை 17. க. ஆறுமுகம், 18. பெண் மாணிக்கம்,
எதிராளிகள்

வடமாகாணம் யாழ்ப்பாணம், வடமராட்சி கட்டைவேலிக் கோவிற்பற்று திக்கவயல் செ. ப, 38½ ஷெ. செ, ப. 1½. என்னும் ஆதனம் 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச்சட்டத்திற்கமையமேற்படி கோட்டின் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென் றுஇத்தாலும்க றிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1957-ம் ஹூ மாசி மீ 7ம் உ 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிருர்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி
ஒப்பம்: சு. சபாரத்தினம்,
சக்கிடுத்தார்.
1956ம் ஹூ மார்கழிமீ 20 உ
G 306 28- 5-1-57

### அரசியல் அலை

—0—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. பிலிப்பு குணவாத்தன சமசமாசக் கட்சியினரை வரவழைப்பதற்குக் காரணம் உண்டு. அக்கட்சித் தலைவரும் அதிகாரமுள்ள சகாக்களும் தோற்றுவிட்டனர். எனவே எஞ்சியிருப்பவர்களும் பொதுவுடைமையினரும் ம. ஐ. மு. அங்கத்தவர்களுஞ்சேர்ந்து கொழும்பு மாநகர சபையிற் பத்து இடங்களை ஒருமுகமாக்கி விட்டாற் பின் இடையில் நிற்பவர்கள் சிலரின் உதவிகொண்டு ஒருபோது தலைவர் பதவியைம. ஐ. மு. பெற்று விடலாம் என்பது மந்திரி குணவர்த்தனவுக்கு நோக்கமாகலாம்.

இதற்கிடையிற் பிரதமர் சனநாயகத்தைப்பற்றி நூல்களிற் படித்தவற்றையும் வெளியூர்களிற் பிரசங்கஞ் செய்ததையும் மறந்து, கொழும்பு மாநகரசபையை ம. ஐ. மு. ஐந்து அங்கத்தவர்கள் ஆட்டி வைப்பார்கள் என்று அதிகாரத் திமிர் பிடித்து அரற்றுகின்ருர். மத்திய அரசாங்கத்தின் மடியிலே உள்ளூர் ஆட்சிச்சபைகள் இருக்குமேயானல் இச்சபைகளுக்குத் தேர்தல் வைக்கவேண்டியதில்லையே. மத்திய அரசாங்கம் நியமன அங்கத்தவர்கள் மூலம் உள்ளூர் ஆட்சி செய்யலாமல்லவா?

#### அதிகாரக் குரல்

எதைப்பேசுவது எதைப் பேசாது விடுவது என்று பிரதமருக்கு இன்னும் அறியும் ஆற்றல் இல்லையானல் அவர் பதவியை விட்டு நீங்கி விடுவது புத்தியாகும். மத்திய அரசாங்கத்தின் சித்தப்படிதான் கொழும்பு மாநகரசபையோ ஏனைய உள்ளூர் ஆட்சிச் சபைகளோ தாளம் போட வேண்டுமென்பது, பிரதமர் பண்டாரநாயகவின் சனநாயகக் கொள்கைப் புது விளக்கம். இந்தக் குறுகிய மனப்பான்மை படைத்தவரா சிறுபான்மையினருக்குத் தாராளமான மனப்பான்மை காட்டக் கூடியவர்?

தோல்வியும் வெற்றியும் மாறிமாறி வருவன. தோல்வி யடைந்தவர்கள் நியாயம் நீதி மனச்சான்று இவைகளையும் இழந்து விடுவதா?

## சங்கானை செங்கற்படை
# மகாதேவப்பிள்ளையார்

சங்கானையில் உள்ள திருத்தலங்களுள் இக்கோயிலும் ஒன்று. இவ்வாலயம் 400 ஆண்டுகளுக்கு முற்பட்டதாயிருக்கக்கூடும் என்றுகொள்ளுதல் பிழையாகாது. இக்கோயில் முகாமைக்காரரையும் கோயிலுக்கு அண்மையில் வசிப்போரையும் விசாரித்துள்ளேன். 'இக் கோயில் ஆரியச்சக்கரவர்த்திகள், யாழ்ப்பாணத்தை ஆண்ட காலத்துக் கட்டப்பெற்றதென அறியவந்தது. பறங்கியர் யாழ்ப்பாணத்தைப் பிடித்தபொழுது ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சியும்முடிவடைந்தது. அதன் பின் ஒல்லாந்தர் ஆண்டனர். ஒல்லாந்தர்காலத்தில் இக் கோயில் இடிக்கப்பட்டது. அதன் பின் ஆங்கிலேயர் ஆளத் தொடங்கினர். இவர்கள் ஒல்லாந்தர்போலாகாது நீதியாக ஆண்டனர். இவர்கள் காலததில் இக்கோயில் முதிரைக் கல்லாற் கட்டப்பெற்றது. கிட்டத்தட்ட 60 ஆண்டுகளுக்கு முன் முதிரைக் கற் கட்டடத்தை இடித்து வயிரக் கல்லால் மீண்டுங் கட்டிக் கொடியேற்றி விழா நடத்தினர். சென்றநான்கு ஆண்டுகளுக்கு முன் மண்டபம் திருத்திக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு முன் சிலவருடங்கள் விழா நடைபெறவில்லை. திருப்பணி முடியாமல் இருந்ததே காரணம். இக்கோயிலில் ஆண்டு தோறும் ஆடி மாதத்தில் விழா நடைபெறுகிறது. இக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெருமானை 'செங்கற்படை மகாதேவப் பிள்ளையார்' என அன்பர்கள் அழைப்பர். சில பாக்களிலும் இவ்விதமே குறிப்பிடப்படுகிறது. இக் கோயிலின் திருப்பணி இன்னமும் நிறைவேருதிருக்கின்றது. சைவப்பெருமக்கள் பொருளுதவி செய்து இதனை நிறைவேற்றுதல் பெரும் நன்மை பயப்பதாகும்.

திரு. ப. இ. தேவராசா
கொழும்பு

—·—

### தமிழ் நிலைமை பற்றிப் பிழையான கருத்து

———

வண்ணை வைத்தீசுவர வித்தியாலயத்தில் நடந்த கூட்டமொன்றில் திரு. ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் தலைமை வகித்துப் பேசும்போது தென்னிந்தியாவில் இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் இருக்கிருர்கள். அவர்கள் இருக்கும்பொழுது இலங்கை அரசாங்கம் என்ன செய்தாலும் தமிழ் மொழிக்குப் பெருந்திமை உண்டாக மாட்டாது என்று சிலர் உறுதிமொழி கூறுகின்ருர்கள். இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள மனக்குறையின் முழுத் தன்மையை அறியாமையினுலேயே இப்படிப்பட்ட உறுதிமொழிகள் வெளியிடப்படுகின்றன என்று கூறினர்.

———

# உங்கள் நக்ஷத்திரம்? 

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 30—12—56 —— 5—1—57. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

ஒரு தளப்பமானவாரம். முதல் நாளே உம்மை அதிகம் நிலைகுலைக்கும். தேகசுகம் விசேடகவனம் கொடுக்கப்படவேண்டும். ஆனல் பின் அரை வாரத்தில் குடும்பச் சிக்கல்கள் தீர்க்கப்படும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்.

புது முயற்சிகளுக்கு முதல் நாள் நல்லதாகும். திங்கள் செவ்வாயும் புதன் காலையும் கவனமாய்க் கழிக்கவேண்டும். நியாயமில்லாமல் நீர் குற்றஞ்சாட்டப் படுவீர். வார மிகுதி ஒரு அளவுக்கு நல்லதாயிருக்கும்.

**மிதுனராசி** மிருகசிரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.

புதுமுயற்சிகளுக்கு முன் அரை வாரம் நல்லாயிருக்கும். தனலாபமும் நிச்சயம். ஆனல் புதன் வியாழன் வெள்ளி கவனமாய்க் கழிக்கவேண்டும். வாரஇறுதி திரும்பவும் நன்ருகும்.

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

ஆரம்ப இடைஞ்சல்களின்பின் நீர் உம்முடைய முயற்சிகளிற் சித்தியடைவீர். எக்காலத்திலும் இல்லாத பெருஞ் செலவுண்டாகும், நீர் கடன்காரனுகவேண்டிவரக்கூடும், வாரத்தின் கடைசி நாளைக் கவனமாய்க் கழிக்கவும்.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், கராடம், 1ம் பாதம். 1ம் பாதம்.

உத்தியோக கருமங் களுக்கு நல்ல வாரம். தேகசுகம் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது, இனத்தவர்களுடன் சண்டைகளுககிடமுண்டு. ஆனுலும் நீண்ட காலமாயுள்ள சில விரோதங்களை நீர் நீக்கக்கூடியதாயிருக்கும்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

வரவு செலவுகளைச் சமாளிக்க மாட்டாது இந்தவாரம் நீர் வருத்தப்படுவீர். காணிகள் காணிப் பொருள்களில் நீர் அணிமையில் முதல் இடுதல் நிச்சயம். நண்பர் அதிக உதவியாயிருப்பர்.

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

நீர்சண்டை தொடுக்க முந்துவீர். நண்பருடன் பிழை எண்ணங்களுக்கிடமுண்டு செலவதிகரிக்கும். வார இறுதியில் இலாபங்களும் அன்னியரிடமிருந்து உதவியும் நிச்சயம்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

தேகசுகம் தொடர்ந்து நல்லாயிருக்கமாட்டாது. உம்முடைய சொந்தச் சிக்கல்கள் இன்னமும் நீக்கப்படாதிருக்கும்; ஆனல் அவை கூட்டப்படமாட்டா. வாரஇறுதியில் தனலாபங்கள் நிச்சயம்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்

மற்றவர்களுடைய கருமங்களில் நீர் இந்த வாரம் முயற்சிப் பட்டுக்கொண்டிருப்பீர் நீர் புது முயற்சிகளை மேற் கொள்ளும் பொழுது உமக்குப் பல இடைஞ்சல்களுண்டாகும். ஆனல் சித்தி நிச்சயமாகையால் உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

ஒரு நல்ல வாரம். சிறுசுகவீனங்கள் தவிர சொந்தக் கருமங்களிலும் உத்தியோகக் கருமங்களிலும் பெரும்திருத்தங்களைக் காண்பீர். தனலாபமும் நிச்சயம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

இந்தவாரம் சில குழப்பங்களுண்டாகக்கூடும், ஆனல் அவற்றிலிருந்து நீர் பிழைபடாது வெளியேறுவது நிச்சம். உமது வழியில் நீர் சித்தியடையவேண்டுமானல் கோபத்தை அடக்குக.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

புதுக் கருமங்களுக்கு நல்லவாரம். புகழும் சமுகசித்தியும் நிச்சயம். பிதாவழி இனத்தவர்களுடன் சில சண்டைகளுக்கிடமுண்டு. ஆனல் பெருந் தீமை விளைக்கும் ஆபத்துக்கள் உண்டாக மாட்டா.




வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர் வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 28 12 56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.